මගේ අංකය / எனது இல. / My No. ஓய்வூதிய அறிவுறுத்தல் கடித இல. 13/2021

ඔබේ අංකය / உமது இல. / Your No. ........................

දිනය / திகதி / Date 2021/12/06

அனைத்துப் பிரதேச செயலாளர்களுக்கும்,

**<u>ஓய்வூதியர்களது உயிர்வாழ்ச் சான்றிதிழ் – 2022</u>**

ஓய்வூதியர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய 2022 ஆம் ஆண்டிற்கான உயிர்வாழ்ச் சான்றிதழ் மாதிரிப்படிவம் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. 2022 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட இம் மாதிரிப்படிவம் தவிர்ந்த பிற படிவங்களைத் ஏற்றுக் கொள்வதைத் தவிர்க்குமாறு தாங்கள் தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

2. மேலும் உயிர்வாழ்ச் சான்றிதழ் முதலில் தங்களது கணனி முறைமையினுள் உள்ளிடப்பட்ட பின்னர் உரிய உயிர்வாழ்ச் சான்றிதழானது ஓய்வூதியரது ஓய்வூதியக் கோவையில் கோவை செய்யப்பட வேண்டும்.

3. ஓய்வூதிய உயிர்வாழ்ச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளும் போது கணக்காய்வில் பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளன. எனவே குறித்த குறைபாடுகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவையாவன:

i. தேசிய அடையாள அட்டை கட்டாயமாக உள்ளடக்கப்பட்டுள்ளதா மற்றும் அது சரியானதா என்பதை உறுதிப்படுத்தல்.

ii. ஓய்வூதியரது கையொப்பம் மற்றும் திகதி கட்டாயமானதாவதுடன் அவை கிராம அலுவலரால் பதவி முத்திரை பதிக்கப்பட்டு சான்றளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

iii. உயிர்வாழ்ச் சான்றிதழ் விரலடையாளத்துடன் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் இவ்விடயம் கிராம அலுவலரால் ஒரு குறிப்பாக அம்மாதிரியில் காரணத்துடன் வழங்கப்பட வேண்டும்.

iv. ஓய்வூதியக் கொடுப்பனவுகள் பாதுகாவலரினூடாக வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் பாதுகாவலர் பற்றிய தகவல்கள் மேற்படி மாதிரிப் படிவத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் கட்டாயமாக பூரணப்படுத்தப்பட வேண்டும்.

v. உயிர்வாழ்ச் சான்றிதழ்கள் 2022.03.31 ஆம் திகதிக்கு முன்பாக இற்றைப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு உயிர்வாழ்ச் சான்றிதிழ்களை இற்றைப்படுத்த தவறும் பட்சத்தில் 2022 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து அவ்வாறான ஓய்வூதியர்களது ஓய்வூதியக் கொடுப்பனவுகள் நிறுத்தப்படும் என்பது அறியத்தரப்படுகிறது.

4. அதற்கு மேலதிகமாக மதகுருமார்களிடத்திலிருந்து உயிர்வாழ்ச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளும் போது பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்க நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரது HAF-2/15 CORDI/1507- (SUB I) ஆம்இலக்க 2019.11.06 ஆம் திகதிய கடிதத்தின்பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

5. மேலும், 2/2020 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கைக்கமைவாக இலத்திரனியல் ஓய்வூதிய உயிர்வாழ்ச் சான்றிதழ் முறைமையை பயன்படுத்தும் ஓய்வூதியர்களிடமிருந்து இவ் விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

6. இவ் விடயம் தொடர்பான தங்களின ஒத்துழைப்பானது மிகவும் மெச்சத்தக்கதாகும்.

**ஒப்பம்.**
**ஏ.ஜகத் டீ.டயஸ்,**
ஓய்வூதியப்பணிப்பாளர் நாயகம்.

பிரதிகள்:

1. செயலாளர்- அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு — த.த.த.
2. செயலாளர்- உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு — த.த.த.
3. அனைத்து மாவட்டச் செயலாளர்களுக்கும் — த.த.த.

Sri Lanka Pensions

ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions

இந்த விண்ணப்பம் கட்டணம் ஏதுமற்றது

# ஓய்வூதிய உயிர்வாழ்ச் சான்றிதழ் - 2022

தொ. இல (கிராம சேவகரால் இடப்படும் இல.)

ஒய்வூதியக் கொடுப்பனவை பெற்றுக்கொள்ளும் பிரதேச செயலகம்:

**2022 ஆம் ஆண்டு தங்களுக்கும் தங்கள் குடும்பத்திற்கும் சாந்தி , சமாதானம் மற்றும் சுபீட்சத்தை ஏற்படுத்தும் ஆரோக்கியமான ஆண்டாக அமையட்டும்!**

**குறிப்பு: டிஜிட்டல் உயிர் வாழ்ச் சான்றிதழை பயன்படுத்தும் ஓய்வூதியர்கள் இவ் விண்ணப்பத்தைப் பூரணப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் தமது வதிவிடத்திற்கு அண்மையிலுள்ள டிஜிட்டல் உயிர் வாழ்ச் சான்றிதழை சமர்ப்பிக்கும் வசதியைக் கொண்ட அமைப்பில் அதைச் சமரப்பித்து தமது இருப்பை உறுதிப்படுத்தவேண்டும்.**

ஓய்வூதியம் பெற்றுக் கொள்ளும் ஒவ்வொருவரும் இச் சான்றிதழைப் பூர்த்தி செய்து, உங்கள் பகுதிக்குப் பொறுப்பான கிராமசேவகரிடம் 2022.03.31 திகதிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் 2022 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து ஓய்வூதியக் கொடுப்பனவுகள் நிறுத்தப்படும் என்பதைக் தயவுடன் கருத்திற் கொள்க.

1. முதலெழுத்துடன் பெயர்
2. தேசிய அடையாள அட்டை இலக்கம் (கட்டாயமானது)
3. பிறந்த திகதி (வருடம்/மாதம்/திகதி)
4. ஓய்வூதியம் — வகை — இலக்கம்
5. வதிவிட முகவரி-
6. தொலைபேசி இல - வதிவிடம் / கையடக்க

   கையடக்க தொலை பேசிக்கு ஓய்வூதிய கொடுப்பனவு விபரங்கள் அனுப்புவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதால் இத்தகவல் கட்டாயமாகப் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.
7. கிராம **அலுவலரின்** பிரிவு/ இல -
8. பாதுகாவலர் இருப்பின் அவரது பெயர்

   8.1 அவரது தேசிய அடையாள அட்டை இலக்கம்

   8.2 தொலைபேசி இல - வதிவிடம் / கையடக்க

**என்னால் மேலே தரப்பட்ட தகவல்கள் உண்மையானவை என்பதை இத்தால் அறிவிக்கிறேன்.**

திகதி ……………………………… ……………………………… கையொப்பம்

கிராம **அலுவலரின் அறிக்கை**

**சான்றுறுதி**

மேலே குறிப்பிடப்பட்ட வண/ குரு /செல்வி / திரு / திருமதி எனது கிராம உத்தியொகத்தர் பிரிவில் நிரந்தரமாக/ தற்காலிகமாக வதிகிறார். தனது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு அவர் ஆரோக்கியத்துடன் / ஆரோக்கியமின்றி உள்ளார். அவரது பதிவு, வாக்காளர் இடாப்பில் உள்ளது /இல்லை என்பதையும் அத்தாட்சிப் படுத்துகிறேன்.

திகதி ……………………………… ……………………………… கிராம **அலுவலரது** கையொப்பம் மற்றும் பதவி முத்திரை

**மேலொப்பம்.**

திகதி……………………………… ……………………………… பிரசே செயலாளாது கையொப்பம் மற்றும் பதவி முத்திரை

இவ் வதிவிடச் சான்றிதழை பூரணப்படுத்தி சமர்ப்பித்தவர்
(பொருத்தமான கூட்டில் (√) எனப் புள்ளடி இடுக)

| ஓய்வூதியர் | | பாதுகாவலர் | |
|---|---|---|---|

……………………………… **இங்கு பிரித்தெடுக்கவும்** ………………………………

**வதிவிடச் சான்றிதழை ஏற்றுக்கொண்டமையை அறிவித்தல்**

ஓய்வூதிய இலக்கம் ……………………………… பெயர்………………………………

சான்றிதழ் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

பெற்றுக் கொண்ட திகதி ……………………………… ……………………………… ஓய்வூதிய விடய அலுவலர் / கிராம உத்தியோகத்தர் கையொப்பம்